**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of civil procedure)**
**IN THE COURT OF SUBORDINATE JUDGE,**
**KEERANUR**
**CASE NO.OS.No.61/2021**
**Deposition of witness of Plaintiff – P.W.1(நடராஜன்)**
**14.07.2025**

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

1. நான் மங்கத்தான்பட்டி வருவாய் கிராமம் கோட்ரபட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். வேறு தொழில் எதுவும் செய்யவில்லை.

2. தாவா சொத்து எங்குள்ளது என்றால் கீரனூர் வருவாய் கிராமத்தில் உள்ளது. தாவா சொத்தின் சர்வே எண் 211/5 ஆகும். தாவா சொத்தின் பழைய சர்வே எண் 211/9 மற்றும் 5 ஆகும்.

3. தாவா சொத்தின் நான்கெல்லை தெரியும். சர்வே எண் 211/5ன் மொத்த விஸ்தீர்ணம் 0.22.0 ஏர்ஸ் ஆகும்.நான் மொத்த சொத்திற்கும் வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் கிரையம் பெற்ற சொத்து 1300 சதுர அடி ஆகும். அதற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

4. நான் குடியிருக்கும் வீட்டிற்கும், தாவா சொத்திற்கும் இடையே எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 5 கி.மீ தூரம் இருக்கும். நான் சொந்த வீட்டில் குடியிருந்து வருகிறேன். எனக்கு வேறு சொத்துக்கள் சொந்தமாக உள்ளதா என்றால் மங்கத்தான்பட்டி வருவாய் கிராமத்தில் உள்ளது. அந்த சொத்துக்களின் விஸ்தீர்ணம் எவ்வளவு என்றால் சுமார் 5 ஏக்கர் இருக்கும். மேற்கண்ட சொத்துக்கள் பூர்வீக சொத்துக்களா அல்லது நான் கிரையம் வாங்கிய சொத்துக்களா என்றால் பூர்வீக சொத்துக்களும், நான் கிரையம் வாங்கிய சொத்துக்களும் உள்ளன.

5. ஒரு சொத்தை கிரையம் வாங்குவதற்கு முன்பு முன் வில்லங்கம் உள்ளதா என்றும், அதற்கு மூல ஆவணம் உள்ளதா என்றும், பார்த்துதான் கிரையம் வாங்கவேண்டும் என்றால் சரிதான்.

6. தாவா சொத்திற்கான மூல ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாவா சொத்து நத்தம் என்பதால் என் கிரையதாரர் குடியிருந்ததற்கான சான்று தாக்கல் செய்துள்ளேன்.

7. நான் மேலே சொல்லியுள்ள ஆவணத்தை தவிர தாவா சொத்து சம்மந்தமான வேறு ஆவணத்தை பார்த்தேனா என்றால் இல்லை. நான் கிரையம் வாங்குவதற்கு முன்பு தாவா சொத்தை அக்கம் பக்கத்தில் விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை.

8. இதற்கு முன்பு இதே பிரதிவாதிகளுக்கு எதிராக தாவா சொத்தை பொறுத்து கீரனூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.42/2009 என்ற வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த வழக்கு எதனால் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் உரிமை விளம்புகை பரிகாரம் கோரவில்லை என்பதால் தள்ளுபடி செய்யப்பட்டது.

9. அந்த வழக்கில் பிரதிவாதிகள் என்ன எதிர்கட்சி செய்தார்கள் என்றால் தாவா சொத்தை அவர்கள் கிரையம் வாங்கியதாக சொன்னார்கள். தாவா சொத்திற்கு பிரதிவாதிகள் தான் உரிமையாளர்கள் என கட்சி செய்தார்கள் என்றால் இல்லை. ஏற்கனவே நீதிமன்றத்தில் நடந்த வழக்கு சம்மந்தமான விவரங்கள் அனைத்தையும் தெரிந்துகொண்டு இவ்வழக்கில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் உரிமைதாரர்கள் இல்லை என குறிப்பிட்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

10. கீரனூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளதாக சொல்கிறேன் என்றால் சரிதான். அந்த தீர்ப்புரையை முழுமையாக படித்து தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை.

11. அ.வ.எண்.42/2009 வழக்கின் தீர்ப்புரையின் முழுமையான விவரங்கள் சொல்லாமல் அதில் எனக்கு சாதகமாக சொல்லப்பட்ட விவரங்களை மட்டும் இந்த வழக்குரையில் சொல்லி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

12. அ.வ.எண்.42/2009 வழக்கின் தீர்ப்புரை 7–வது பக்கம் 1–வது எழுவினாவில் 5–வது பத்தியில் எனவே வாதி உரிமையாளர் அல்லாத வாடகைதாரர் என பரமசிவம் ஆசாரியிடம் இருந்து கிரையம் பெற்றுள்ளதாக தெரியவருகிறது. எனவே உரிமையில்லாத நபரிடமிருந்து வாதி வழக்கு சொத்தினை கிரையம் பெற்றுள்ளதால் வாதி வழக்கு சொத்தின் உரிமையாளர் என கூற முடியாது. எனவே வாதி வழக்கு சொத்தின் உரிமையாளர் அல்ல எனவும், 3ஆம் பிரதிவாதி வழக்கு சொத்தின் உரிமையாளர் எனவும் தீர்மானிக்கப்படுகிறது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down by me in Open Court, read over to the witness and acknowledgedby him and found correct.

ஒம்/–திரு.C.ராஜேஷ்,
சார்பு நீதிபதி,
கீரனூர்.